**ஆவிக்குரிய வரங்கள்**

**வாசிக்க**: 1**கொரிந்தியர்** 12: 1-11

5. அற்புதங்கள் செய்யும் வரம்: தேவனுடைய நாமம் மகிமைப்படும், இயேசு கிறிஸ்துவே தேவன் என்பதை உறுதிப்படுத்துவார்கள். தேவனுடைய செய்தியையும்,

வல்லமையையும் உறுதி செய்யும்படியாக, மனிதர்களால் முடியாத காரியங்களை தேவனுடைய நாமத்தினால் நடப்பிக்கும் வரம் தான் அற்புதங்கள் செய்யும் வரமாகும் இந்த வரத்தை உடையவர்கள் தங்களுடைய செயலால் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். 1கொரிந்தியர் 12:10,28,29, அப்போஸ்தலர் 6:8, 8:6, 9:36-42, ரோமர் 15:18,19

6. தீர்க்கதரிசனமாகிய வரம்: தேவனுடைய மனதையும் சித்தத்தையும் அறிந்து, அதை சமயத்துக்கு ஏற்ற செய்தியாக மக்களுக்கு சொல்லி, அவர்களை கண்டித்து உணர்த்தி சரி செய்வார்கள். மக்களுக்கு சவால் கொடுத்து பரிசுத்தத்துக்கு நேராக வழிநடத்தும் வரம் தான் அற்புதங்கள் செய்யும் வரமாகும். இந்த வரத்தை உடையவர்கள் தேவனுடைய சத்தியத்தை உறுதியாக பேசுவார்கள். 1கொரிந்தியர் 12:10, 28-30, 14:1-4, 13:12, எபேசியர் 4:11-14

தீர்க்கதரிசனம் என்றால்….. என்ன நடந்தது? என்ன நடக்கிறது? என்ன நடக்கப்போகிறது? போன்ற காரியங்களை வசனத்தின் அடிப்படையில் சொல்லி சத்தியத்துக்கு நேராக வழிநடத்துவதே தீர்க்கதரிசனமாகும்.

7. ஆவிகளை பகுத்தறியும் வரம்: உண்மையான ஆவி எது என்றும், பொய்யான ஆவி எது என்றும் பகுத்தறியும் வரம் தான் ஆவிகளை பகுத்தறியும் வரமாகும். இந்த வரத்தை உடையவர்கள் உண்மை எது? பொய் எது? என்றும், நன்மை எது? தீமை எது? என்று மற்றவர் அறிந்துக் கொள்வதற்கு முன் இவர்கள் அறிந்துக் கொள்வார்கள். 1கொரிந்தியர் 12:10, 1யோவான் 4:1-6, மத்தேயு 16:21-23

8. பற்பல பாஷைகளை பேசும் வரம்: மிக எளிதில் பிற மொழிகளை கற்றுக்கொண்டு பேசுவது, தெரியாத மொழியை கற்றுக்கொள்ளாமலேயே பேசுவது மற்றும் தேவனாலும் வியாக்கியானம் செய்பவராலும் மட்டும் புரிந்துக்கொள்ளக்கூடிய மொழியில் ஜெபிப்பதும், தேவனை துதிப்பதுமான வரம் தான் பற்பல பாஷைகளை பேசும் வரமாகும். 1கொரிந்தியர் 12:10, 12:28-30, அப்போஸ்தலர் 2:1-11.

9. பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரம்: அறியாத மொழியில் ஒருவர் பேசுவதை புரிந்துக்கொண்டு அதை சபைக்கு வெளிப்படுத்துவதும் மற்றும் தெரிந்த மொழியை சிறப்பாக மொழிபெயர்ப்பு செய்யும் வரம் தான் பாஷைகளை வியாக்கியானம் பண்ணும் வரமாகும். இந்த வரத்தை உடையவர்கள் மொழிபெயர்ப்பு செய்வார் மற்றும் வியாக்கியானம் செய்வார். 1கொரிந்தியர் 12:10,30, 14:14,26.

**கேள்விகள்**:

1. தீர்க்கதரிசனம் என்றால் என்ன?

2. ஆவிகளை பகுத்தறியும் வரம் என்றால் என்ன?

3. அற்புதங்கள் செய்யும் வரத்தை உடையவர்கள் என்ன செய்வார்கள்?